பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை 24.12.2019 கதிர் 49

இனிது ரகசியம் அல்ல!

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக ஐ.தே.க. மற்றும் எதிரணிப் பிரமுகர்கள் பலர் கைது செய்யப்படலாம் என்ற பேச்சு பரவலாக அடிபடுகின்றது. ஏற்கனவே சம்பிக்க ரணவக்க எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த பக்கம் 02

## வடக்கு-கிழக்குக்கு அதிகாரம் பெறும் ரகசிய நடவடிக்கையில் தமிழ் மக்கள்!

### வாசுதேவவின் புதிய கண்டுபிடிப்பு இது



கொழும்பு, டிசெ. 24

சர்வதேசம் எமது நாட்டுக்குள் தலையிடுவதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு இந்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. – இப்படித் தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. வடக்கிலும் கிழக்கிலும் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளத் தங்களுக்கு உரிமை இருப்பதாகத் தமிழ் மக்கள் மிகவும் இரகசியமான முறையில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் பக்கம் 03

# படித்த சிங்கள சிவில் தலைவர்கள் சமஷ்டி முறையை விரும்புகிறார்கள்

### அரச தலைவர்கள்தான் கதை விடுகிறார்கள் நீதியரசர் விக்னேஸ்வரனின் கணிப்பீடு இது



யாழ்ப்பாணம்,டிசெம்பர்24

சமஷ்டியைச் சிங்கள மக்கள் விரும்புகின்றார்கள் இல்லை என்று எமது அரச தலைவர்கள் கூறுகின்ற கூற்று மிகத் தவறானது. படித்த பல சிங்கள சிவில் தலைவர்கள் சமஷ்டி முறைமையை விரும்புகின்றார்கள்.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் நிறுவுநரும், அக்கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் நீதியரசருமான சி. வீ.விக்னேஸ்வரன். பக்கம் 03

## பெண் உட்பட மூன்று இந்தியரும் சாரதியும் தெற்கு விபத்தில் சாவு!

### அதிவேக வீதியில் தூக்கத்தால் நேர்ந்த விபரீதம்



கொழும்பு,டிசெ.24

தெற்கு அதிவேக வீதியில் நேற்று மாலை இடம் பெற்ற மோசமான வீதி விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக வீதியின் வெலிப்பன்ன – குருந்துகஹஹெத்தெம்ம ஆகியவற்றுக்கு பகுதியிலேயே இந்த விபத்து பக்கம் 03

## 19 ஆயிரம் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீடு தேவை

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு இல்லை என மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் சமூக பக்கம் 02

## ராஜித வெளிநாடு பயணிக்கத் தடை

கொழும்பு, டிசெ. 24

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன வெளிநாடு செல்வதற்கு இடைக்காலத் தடைவிதித்து கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன பக்கம் 03

## சம்பிக்க சம்பந்தப்பட்ட விபத்து; மறியலில் பூஜிதிடம் விசாரண!

### அனுமதி வழங்கி நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு,டிசெ.24

முன்னாள் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க சம்பந்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படும் பில், தற்சமயம் கட்டாய விடு பக்கம் 03

## ஜனவரி 2இற்குப் பின்னர்தான் வடக்கு ஆளுநராகிறார் சாள்ஸ்

கொழும்பு, டிசெ. 24

வடக்கு மாகாண ஆளுநராக தற்போதைய சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. பி.எஸ்.எம். சாள்ஸ் நியமிக்கப்படவுள்ளார் என்றும், இவரது நியமனம் குறித்து ஜனவரி மாதம் 2 ஆம் பக்கம் 03

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் கவனயீர்ப்பு






கிளிநொச்சி,டிசெ.24

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கந்த சாமி கோயில் முன்றிலில் ஆரம்பமானது.

போராட்டத்தில், பங்கேற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், உள்ளக பக்கம் 03

## அரசியல் பழிவாங்கல்கள் மீண்டும் ஆரம்பம் சுயாதீன நீதித்துறை அதற்கு முடிவு கட்டும்!

### சஜித் பிரேமதாஸ முழு நம்பிக்கை



கொழும்பு,டிசெ.24

சர்வாதிகார ரீதியில் அதிகாரத்தை பிரயோகித்து ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும் செயற்பாடுகளுக்கு இனி பக்கம் 02



காணமலாக்கப்பட்டவர்களது பிளைளைகளுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் முன்பாக நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில்

நடைபெற்றபோது வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அதில். பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் வசந்தாதேவியின் 60 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த கற்றல் உபகரணங்கள் அந்தப் பிள்ளைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

## 19 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நலனோம்பு அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் மூலம் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இன்றைய புள்ளி விவரத்தின்படி 19 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடு இல்லை.

அதிலும் குறிப்பாக தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளன. ஏனெனில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசம் என்பதால் அதிகளவில் வீடுகள் தேவைப்படுகின்றன என்று யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் சட்டத்தரணி எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் முன்னேற்பாட்டு குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இந்தக் தகவலை மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

வீட்டுத்திட்டத்திற்கு காணாமற்போனவர்களின் குடும்பங்கள், இடம்பெயர்ந்தோர் மற்றும் முன்னாள் போராளிகள் எனப் பலரும் விண்ணப்பித்துள்ளார்கள். அதில் ஆயிரத்து 400 முன்னாள் போராளிகளுக்கு இன்றுவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மேலதிக அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

(ஐ-07)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விகாரமாதேவி பூங்காவளாகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களின் மதவழிபாட்டு நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட அரசியல் பழிவாங்கல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இதனை ஜனநாயக ரீதியில் நிறைவுக்குக்கொண்டு வருவது அவசியமாகும்.

வீதி விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நாளை(இன்று) விடுதலை செய்யப்படுவார் என நம்பிக்கை வைத்துள்ளோம். சுயாதீனப்படுத்தப்பட்ட நீதித்துறை ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள் தலைதூக்கும் போது சரியான தீர்வினை வழங்கியது. அதன் தொடர்ச்சி இனியும் இடம்பெறும் என எதிர்பார்க்கிறோம்.– என்று அவர் கூறினார்.

சட்டவிரோதமான முறையில் இடம்பெற்ற கைது மற்றும் அரசியல் பழிவாங்கலுக்கு சட்டமார்க்கத்தின் ஊடாகவே தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அரசியல் ரீதியான செயற்பாடுகள் மாறுபட்டவையாகக் காணப்படலாம். ஆனால் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான குரல் ஒன்றாகவே காணப்பட வேண்டும். – எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது நான்தான் என்று ராஜித சேனாரத்ன எம்.பி. கூறுகின்றார். ரிசாத் பதியுதீன் எம்.பிக்கு எதிராகவும் சட்டத்தின் பெயரால் பாய்ச்சல் நடக்கலாம் என்று பேச்சடிபடுகின்றது.

ஆனால் நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய இந்த விடயத்தில் பார்வையாளராக இருக்க மாட்டார். தனக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்காக அவர் சட்டச்சவுக்கைக் கையில் எடுத்துத் தயாராகிவிட்டார் என்கின்றன கொழும்பில் ஊடக வட்டாரங்கள்.

சம்பிக்க ரணவக்க கைது விடயத்தில் நாடாளுமன்ற முறைமைகள் ஏன் ஒழுங்கு முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதை நேரில் கேட்டு அறிவதற்காகப் பதில் பொலிஸ்மா அதிபரைத் தன்னை வந்து சந்திக்குமாறு சபாநாயகர் அழைத்துள்ளார் என்று ஒரு தகவல்.

இந்த விடயம் குறித்து பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் சபாநாயகர் அலுவலகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சபாநாயகர் அலுவலகத்துக்குப் பதில் அனுப்புவதற்காக வேனும் இந்த விடயம் குறித்து விவரமான – ஆழமான – விசாரணையை சுயாதீனமாகச் செயற்படும் பொலிஸ் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டியுள்ளது. சம்பிக்க ரணவக்க எம்.பி. கைதுக்கான காரணங்கள், வெள்ளிக்கிழமை முன்னிரவில் அவர் வீட்டுக்குச் சென்று கைது செய்தமை போன்ற பல விடயங்களுக்குப் பொலிஸ் தரப்பு விளக்கம் கூற வேண்டும். கைதுக்குத் தூண்டிய அரசியல் தரப்புகள் இந்த விளக்கங்கள், வியாக்கியானங்கள், விசாரணைகளுக்குத் துணை வரப்போவதில்லை என்ற உண்மை பொலிஸ் உயர்தரப்புகளுக்கு இப்போது புரிய ஆரம்பித்திருக்கும்.

ராஜித சேனாரத்ன விடயத்திலும் பொலிஸ் தரப்பில் குழப்பம் இருப்பதாகவே தெரிகின்றது. ராஜித சேனாரத்னவுக்கு முன்பிணை கோரும் மனுக்களைத் தாக்கல் செய்தவர் தமிழர் தரப்பில் பிரபலமான சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசா. நேற்று இவ்விடயம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லக்மல் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே.வி.தவராஜாவும், வசந்த பண்டாரவும் முன்னிலையாகி வாதிட்டனர். மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்ட குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தின் இயக்குநர் மற்றும் பொறுப்பதிகாரிகளுக்கு நோட்டீஸ் வழங்க இணங்கிய நீதிமன்றம் விசாரணையை 30ஆம் திகதி நடத்தத் தீர்மானித்தது.

அதுவல்ல விடயம். நேற்று முற் பகல் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தம் பாட்டில் சுயாதீனமாக –நோட்டீஸ் பெறாமலேயே– அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் டிலீப பீரிஸ் ஆஜரானார். அவர் நீதிமன்றத்தில் முன்வைத்த ஒரு கருத்துத்தான் முக்கியமானது.

இவர்கள் அரசியலில் ஸ்டண்ட் அடித்துப் பெயர் வாங்குவதற்காக இப்படிப் புதுப் புதுக் காரணங்களைத் தங்கள் பாட்டில் கற்பனை பண்ணிக்கொண்டு நீதிமன்றுக்கு வந்து வழக்குப் போடுகின்றார்கள். அவரைக் கைது செய்யப்போகிறார்கள் என்று யார் சொன்னார்கள்? யாரும் இவரை இந்த விடயங்கள் குறித்து விசாரணையாவது செய்தார்களா? கற் பனையில் வரும் விடயங்களுக்காக வழக்குகளை விசாரித்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கக்கூடாது. இந்த வழக்கைத் தள்ளுபடி செய்யுங்கள்– என்ற சாரப்பட மன்றில் கூறப்பட்டது.

ஆனால் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு ஏற்று, எதிர்த்தரப்புக்கு நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டது.

இப்படி ராஜித சேனாரத்ன தாம் கைது செய்யப்படலாம் என்று அஞ்சி முன்பிணை கோரிய வழக்கில் காலையில் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜரான அரசுத் தரப்பு 'இந்த கைதுக் கதை ராஜிதவின் கற்பனை விடயம்;கனவுச் சித்திரம்' – என்று வர்ணித்தது. இதை நீதிமன்றத்தில் கூறியவர் வேறு யாருமல்லர், அரசுத் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல்தான்.

காலையில் அப்படி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் கூற, அதே நீதிவானிடம் மாலையில் அவரது அலுவலக அறைக் கூடத்தில் ஒரு மனுவுடன் போய் இறங்கினார்கள் குற்றப் புலனாய்வு அதிகாரிகள்.

ஏற்கனவே கடந்த நவம்பர் 10ஆம் திகதி ராஜித சேனாரத்னவுடன் செய்தியாளர் மாநாட்டில் வெள்ளைவான் கடத்தல் குறித்து அதிரடிக் கருத்துக்கள் வெளியிட்ட இருவர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளனர் அல்லவா? அவர்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த 'பி' அறிக்கையை ஒட்டியே அந்த மனுவும் அமைந்தது. இந்த விடயம் தொடர்பில் ராஜித சேனாரத்னவிடம் விசாரணை நடத்தப்படவிருப்பதால் அவர் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கும் உத்தரவை அந்த மனு மூலம் அதே நீதிவானிடம் பெற்றுக்கொண்டனர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள்.

ராஜித தாம் கைது செய்யப்படலாம் என்று கற்பனைக் கனவு எண்ணத்துடன் நீதிமன்றுக்கு வந்துள்ளார் என அரசுத் தரப்பு காலையில் நீதிமன்றில் கூறுகின்றது. மாலையிலோ அதே விடயத்துக்காக ராஜித நாட்டை விட்டு வெளியே செல்லாமல் தடை விதிக்கும் உத்தரவை அதே நீதிமன்றத்திடம் பெறுகின்றனர் குற்றப் புலனாய்வு அதிகாரிகள். இதுதான் இலங்கையின் அரசியல் கலந்த பொலிஸ் விசாரணை!

முன்பிணை மனு ஒன்றை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்று நோட்டீஸ் பிறப்பித்தால் அந்த விசாரணையில் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படும் வரை சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்வதில்லை. அதுதான் வழமையான சம்பிரதாயம். (2015 முதல் கடந்த மாதம் வரை பல விடயங்களில் – பல வழக்குகளில் – கோட்டாபய ராஜபக்ஷ விளக்கமறியலைத் தரிசிக்காமல் இருந்தமைக்கு இந்தச் சம்பிரதாய நடைமுறையும் ஒரு காரணம்.) முன்பிணை மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்ற பின்னர் அப்படிக் கைது செய்வது அந்த மனுவை விசாரிக்கும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை உதாசீனம் செய்யும் விடயமாக அர்த்தப்படுத்தப்படலாம் என்பதால் அப்படிக் கைது செய்வதில்லை. ஆனால் அது கட்டாயமான ஒரு கடப்பாடு அல்ல. முன்பிணை உத்தியோபூர்வமாக நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படும் வரை விரும்பினால் பொலிஸ் கைது செய்யலாம்.

ராஜித விடயத்தில் நீதிமன்றம் காலையில் முன்பிணை மனுவை விசாரணைக்கு ஏற்று நோட்டீஸ் பிறப்பித்து விட்டது. எனவே ராஜிதவைக் கைது செய்யமுடியாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயனப்படுத்தி ராஜித வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டால் என்றால் என்ன செய்வது? அதனால்தான் இந்த நீதிமன்ற உத்தரவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விண்ணப்பித்துப் பெற்றுக்கொண்டதாம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில மாதங்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்குச் சென்று இதய சத்திரசிகிச்சை செய்து கொண்டார் அல்லவா? அது போல ராஜிதவும் மூன்று வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூரில் இருதய சத்திர சிகிச்சை செய்திருந்தார். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அந்த ஆஸ்பத்திரியில் – அந்த சத்திரசிகிச்சை செய்த தமிழரான டாக்டரிடம் – ராஜித முன்னிலையாகி மருத்துவ பரிசோதனை செய்யவேண்டும். இப்போது அதற்கான காலம் வந்துவிட்டது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் சிங்கப்பூர் செல்லலாம் என அவர் திட்டமிட்டிருந்தார், ஆனால் இந்த விசாரணைப் பூதம் கிளம்பிய சமயத்தில் சிகிச்சைக்காக சிங்கப்பூர் பறந்தால் விசாரணைக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடிவிட்டார் என்ற அபவாதம் வரும், ஆகையினால் சிகிச்சைக்கு இப்போது போகவேண்டாம், அதைத் தள்ளிவையுங்கள் என்று ராஜிதவிடம், எம்.பியான அவரது மகன் ஆலோசனை கூறியிருந்தாராம். அதனால் சிங்கப்பூர் சென்று சிகிச்சை செய்யும் திட்டத்தை ராஜித ஒத்திவைத்திருந்தார்.

ஆனால் அதற்கு இடையில் பொலிஸார் புகுந்து அவர் வெளிநாடு செல்வதற்கான தடை உத்தரவை நீதிமன்றம் மூலம் பெற்றிருக்கின்றனர்.

சம்பிக்க ரணவக்க எம்.பி. கைது விவகாரம் அரசியல் கருத்து நிலை ரீதியாக புதிய அரசுக்கு 'பூமராங்' ஆகத் திருப்பியிருப்பதாகத் தெற்கில் பேசப்படுகின்றது.

ராஜித விவகாரமும் அப்படியாகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

– மின்னல் –

## படித்த சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் ஆக்கப்பட்டவர்களது பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணம். கல்வியங்காட்டில் உள்ள காணாமல்போனோர் அலுவலகம் முன்பாக நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே இந்தக் கணிப்பீட்டை அவர் தெரிவித்தார்.

அங்கு தாம் ஆற்றிய உரையில் இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு;-

கடந்த காலத்தில் இடம்பெற்ற இன அழிப்பு யுத்தத்தில் இறந்து போனவர்கள் போக அவர்களுடன் இருந்து உயிர்தப்பித்த பல தரப்பட்ட மக்கள் பலவித பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரதும் தற்போதைய நிலை எமக்குத் தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற வகுதியினரின் நிலை மிகவும் கவலைக்கிடமானது. காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது கொலை செய்யப்பட்டு விட்டார்களா அல்லது மறைவான ஏதாவது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்களா என்ற எதுவித தகவல்களும் இல்லாத நிலையில் பெற்றோர்களும் அவர்தம் உற்றார், உறவினர்களும் குழந்தைகளும் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றமை வேதனைக்குரியது. காணாமல் போனமை பற்றிக் கூறப்பட்டால் பொலிஸார் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் கடைசியில் எங்கு காணப்பட்டனர் என்று அறிந்து அங்கிருந்து விசாரணைகளைத் தொடங்க வேண்டும். ஆனால் எமது பொலிஸாரும் அரசாங்கமும் இராணுவமும் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்றவாறே இருந்து வருகின்றார்கள். அதாவது விசாரணை செய்வதைத் தவிர்க்கின்றார்கள். இதனால்தான் இன்றைக்கு ஆயிரம் நாள்களைக் கடந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களைச் சமாதானம் செய்வதற்கே இதுபோன்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்கள் வடக்கு, கிழக்கில் உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த அலுவலகங்களின் செயற்பாடுகள் முன்னுக்கு பின் முரணானவை. இவர்கள் உண்மையாகவே காணாமல்ஆக்கப்பட்டவர்களைத் தேடுகின்றார்களா அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சமாதானப்படுத்துவதற்கான வழிவகைகளை தேடிக் கொண்டிருக்கின்றார்களா என்பது தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பிரிவில் இரண்டு வகையானவர்கள் காணப்படுகின்றார்கள். ஒன்று - யுத்தகாலத்தில் காணா மல் ஆக்கப்பட்டு அவர்களின் இருப்பிடம் தெரியாத நிலையில் இருக்கும் ஒரு தொகுதியினர். இன்னொரு தொகுதியினர் - யுத்தத்தின் இறுதி நாள்களில் அவர்களின் பெற்றோர்களினால் அல்லது கணவன், மனைவியினரால் அல்லது பிள்ளைகளினால் தாமாகவே வலிந்து அரச படைகளிடம் தமது அன்புக்குரியவர்களைக் கையளித்த உறவுகள். இவ்வாறு கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அரசு நிச்சயம் கூறித்தான் ஆகவேண்டும். இதற்கு எந்தவித சாட்டுப் போக்குகளையும் கூற முடியாது.

இவர்களைப் பொறுப்பேற்ற இராணுவத்தினரே இதற்கான பொறுப்புக்களைக் கூற வேண்டும். தற்செயலாக அவர்களின் கைகளில் இருந்து சட்ட விரோதத் தடுப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டிருந்தால் அவர்கள் ஏதோ ஒரு புள்ளியில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அழிக்கப்பட்டிருக்க வேண்டும். எப்படியிருப்பினும் இச்சங்கிலித் தொடரில் ஏதோ ஒரு புள்ளியில் உள்ளவர்கள் வகை கூறியே ஆக வேண்டும்.

எமது அரசியல் தலைவர்கள் எழுந்தமானமாகக் கூறுகின்றார்கள் - நடந்து முடிந்தவை முடிந்தவையாகவே இருக்கட்டும், இனி நடக்க இருக்கின்ற விடயங்கள் நல்லவையாக நடக்க நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம் என்று.

தமிழ் மக்கள் இணைந்து செயற்படுவதற்கு ஒருபோதும் பின்நிற்கவில்லை. ஆனால், பெரும்பான்மையினரே எம்மை இணைத்துக் கொள்வதற்கோ அல்லது எமக்குரிய அங்கீகாரங்களை வழங்குவதற்கோ முன் வருகின்றார்கள் இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் சேர்ந்து போங்கள்' அல்லது சிங்களவர்களுக்கு அது பிடிக்காது, அவர்களுக்குப் பிடிக்காதவற்றைத் தவிருங்கள்' என்று கூறும் எம்மோர், மத்தியில் இருப்பவர்களிடம் ஏதோ எதிர்பார்ப்பிலேயே அவ்வாறு கூறுகின்றார்கள் போலத் தெரிகின்றது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது எமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு நாம் இடமளித்தல் ஆகாது.

எம்மைப் பொறுத்தவரையில் தேவையுடையவர்களுக்கே அவர்களின் தேவை பற்றிய தெளிவும் அவசரமும் நன்கு விளங்கும். ஏனையவர்களுக்கு இது பற்றிய தெளிவு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் குறைவு. எமது அரச தலைவர்கள் கூறுவது போல சிங்கள மக்கள் விரும்புகின்றார்கள் இல்லை என்ற கூற்று மிகத் தவறானது. படித்த பல சிங்கள சிவில் தலைவர்கள் சமஷ்டியை விரும்புகின்றார்கள். சமஷ்டியைப் பற்றிய தேவை தமிழ் மக்களுக்கே உரியது. எமது நிலங்கள், இருப்பு, வளங்கள், கலைகள் பறிபோகாதிருக்க சமஷ்டி தேவையாக இருக்கின்றது. அரசியல் அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களே ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியை முறையிலான அரசியல் தீர்வை மிகுந்த அபிலாஷையுடன் எதிர்நோக்குகின்றார்கள். நாட்டைத் துண்டு போடுவதோ அல்லது பிளவுபடச் செய்வதோ எமது நோக்கமல்ல. மாறாக தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வீக குடிகள் என்ற கௌரவத்துடன் வாழக்கூடிய ஒரு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

பன்னெடுங் காலமாக நாங்கள் இந்தக் கோரிக்கையை கூட்டாகவும் தனித்தனியாகவும் விடுக்கின்ற போதும் சில அரசியல் தலைவர்களின் குறுகிய சிந்தனைகளும் எதிர்காலத்தில் அவர்களின் அரசியல் இருப்புக்களை வலுப் படுத்தக்கூடிய நோக்கங்களுமே சிங்கள மக்களைப் பிழையான வழியில் இட்டுச்செல்ல வைக்கின்றன.

ஒரு காலத்தில் அரசியல் தலைவர்களின் சிந்தனைகள் நேரானவையாகவும் நிர்மலமானவையாகவும் நிதானமானவையாகவும் காணப்பட்டன. ஆனால் இன்று ஒருவரையாருவர் காட்டிக்கொடுப்பதும் தமக்கு வேண்டாதவர்களின் அரசியல் பாதைகளில் குழிபறிப்பதுமாக காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட இழுபறி நிலைகளே உருவாகியுள் ளன.

உணவுப்பஞ்சம், குழந்தைகளுக்கான பால்மா இன்மை போன்ற காரணங்களுக்காக தனது இயலாமை காரணமாகத் திருடிய ஒருவனுக்கு வருடக்கணக்காக சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. ஆனால் பல ஆயிரம் கோடிரூபாவை ஏப்பம் விட்டுவிட்டு வெள்ளை வேட்டி சேட்டுடன் வலம் வருகின்ற அரசியல் தலைவர்கள் மாலை மரியாதைகளுடன் கௌரவிக்கப்படுகின்றார்கள். மக்களுந் தெரிந்து கொண்டே அவர்களுக்கு வாக்களிக்கின்றார்கள். இந்த நிலையிலேயே நாம் ஓர் இறுதித் தீர்மானத்திற்கு வர வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது அரசியல் தலைமைகள் எமக்கு ஏற்புடையதான ஓர் அரசியல் களத்தை ஏற்படுத்தித் தர முடியாத பட்சத்தில் தமிழ் மக்கள் தமது பகுதிகளில் கூட்டாக இணைந்து கொண்டு தம்மைத் தாமே ஆளுகின்ற ஓர் இனமாக பொருளாதார நிலையில் முன்னேறுகின்றபோதுதான் அரசு எம்மை வியப்புடன் திரும்பிப் பார்க்க வழிசெய்யும். அதுவரை எமது போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். - என்றார்.

## ராஜித வெளிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை கோரி குற்ற விசாரணைப் பிரிவு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விண்ணப்பத்தை ஏற்ற நீதி மன்று, முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன வெளிநாடு செல்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.

கடந்த நவம்பர் 10ஆம் திகதி, ராஜித சேனாரத்ன ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக இரண்டு பேர் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

அந்த விவகாரம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும், குற்ற விசாரணைத் திணைக்களம், ராஜித சேனாரத்னவின் செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாகத் தகவல்களை வெளியிட்ட இருவரையும் கைது செய்துள்ளது.

அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இருவரும் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தம்மைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி, கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தமது சட்டத்தரணிகள் ஊடாகமன்றில் முன்னிலையானார்.

மனுவை விசாரணைக்கு எடுத்த கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 30ஆம்திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தது.

இந்த நிலையில் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன வெளிநாடு செல்வதற்குத் தடை உத்தரவை குற்ற விசாரணைப் பிரிவு நீதிமன்றில் பெற்றுள்ளது. (முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (ஐ)

## குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணத்தில் வேலைக்குச் சென்ற குடும்பஸ்தர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்தார்.

இச் சம்பவத்தில் மானிப்பாய் நவாலி வடக்கைச் சேர்ந்த சண்முகராஜா அம்பிகைபாலன் (வயது 64) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை காய்ச்சல் காரணமாக தனியார் வைத்தியசாலை ஒன்றில் மருந்து எடுத்து குணமாகிய நிலையில் ஞாயிற்றுக்கிழமை வேலைக்குச் சென்ற இடத்தில் மயக்கமடைந்துள்ளார். அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போது அவர் முன்னரே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு-கிழக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கிலும் கிழக்கிலும் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளத் தங்களுக்கு உரிமை இருப்பதாகத் தமிழ் மக்கள் மிகவும் இரகசியமான முறையில் செயற்பட்டு வருகின்றனர். அந்த அதிகாரத்தை ஈட்டுவதற்கு சர்வதேசத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் மற்றும் சிலரும் தெரிவித்திருக்கின்றனர். புதிய அரசுக்கு பாரிய மக்கள் ஆணை கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இவ்வாறான கூற்றை வெளிப்படுத்துவது மக்கள் ஆணைக்கும் அரச ஆட்சிக்கும் விடுக்கும் பாரிய சவாலாகும்.

அத்துடன் சர்வதேசம் எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கான தேவையான வழியை அமைத்துக் கொடுப்பதே சம்பந்தன் போன்றவர்கள் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்வதற்குக் காரணமாகும். அதனால் சம்பந்தன் போன்றவர்களின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் பெரும்பான்மையானவர்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள்.

அத்துடன் வடக்கு-கிழக்கில் இவ்வாறான நடவடிக்கைகள் தலைதூக்காமல் இருக்க, அந்தப் பிரதேசத்தில் எவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்பது தொடர்பாக ஆராய்ந்து அரசு முன்கூட்டியே நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அல்லாத வேறு அரசு ஆட்சிக்கு வரும் போதெல்லாம் மேற்கத்திய நாடுகளின் பிரச்சினைக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை இருந்து வந்திருக்கின்றது.

மேற்கத்திய நாடுகள் எப்போதும் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்கிச் செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சியில் இருப்பதையே விரும்புகின்றன. ஆனால் எமது அரசும் எப்போதும் தேசத்துக்கு முக்கியத்துவம் வழங்கி, மேற்கத்திய நாடுகளின் தேவைக்கு ஏற்றவகையில் செயற்படாமல், எமது கொள்கையை பாதுகாத்துக்கொண்டே முன்னுக்குச் செல்கின்றது. அதுதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எமக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்.

அத்துடன் மேற்கத்திய நாடுகள் எமது பிரச்சினையில் தலையீடு செய்வது, தற்காலத்தில் ஆரம்பித்த விடயமல்ல. 1956இல் பண்டாரநாயக்கவுக்கும் இதற்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நாங்கள் மிகவும் தூரநோக்குடன் சிந்தித்தே எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (ஐ)

## சம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் வாக்குமூலம் பெற கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் சிறைச்சாலை திணைக்களத்திற்கும் இது தொடர்பான உத்தரவை வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒரு பெண் உட்பட 3 இந்தியர்களும் 67 வயதுடைய இலங்கை சாரதியுமாக நால்வர் உயிரிழந்துள்ளமையுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆறு இந்தியர்களை ஏற்றிக் கொண்டு மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த வான் ஒன்றே சுமார் 25 கிலோ மீற்றர் மெதுவான வேகத்தில் சென்று கொண்டிருந்த கென்டெயினர் மீது பின்னால் சென்று மோதியதாகக் கூறப்படுகிறது.

வானின் சாரதி திடீரெனத் தூக்கத்தில் ஆழ்ந்தமையால் இந்த அனர்த்தம் நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த இருவர் காலி, காரகப்பிட்டிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையை நிராகரிக்கின்றோம், காணாமல் போனோருக்கான அலுவலகத்தை நிராகரிக்கின்றோம், காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிய சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும், சர்வதேச விசாரணையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும், கலப்புப் பொறிமுறை வெறும் கண்துடைப்பு, அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்கவேண்டும், கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

இந்தப் போராட்டம் சுமார் 1 மணி நேரம் நடைபெற்றது. (ஐ)

## ஜனவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின்போது உறுதி செய்யப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவருக்கு தற்போது 60 வயது பூர்த்தியாகவுள்ளது. இந்த நிலையின் அவரை ஆளுநராக நியமிப்பது குறித்து அமைச்சரிடம் கேட்டபோது, அவரை ஆளுநராக நியமிப்பது தொடர்பிலான ஆவணப்பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்படும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவைக் கூட்டம் இம்முறை ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் இவரது நியமனம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வாரத்தில் நத்தார் தின விடுமுறை உள்ளதால் அமைச்சரவை கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேரினவாதப் பேரெழுச்சியை எதிர்கொள்ள நாம் தயாரா?

இலங்கைத் தீவின் அரசியலில் மையப் பொருளாக – பிரதான இழையாக – இன்று மாறியிருப்பது இனவாதம்தான்.

பௌத்த, சிங்கள பேரினவாத எழுச்சியை ஒட்டித்தான் இலங்கை அரசியலின் அரசியல் செல்நெறி இன்று கட்டவிழ்கின்றது.

சுதந்திர இலங்கையின் அரசியல் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மையினரிடம் கைமாறியமையை அடுத்து மேலாண்மை பெற்ற பௌத்த, சிங்களப் பேரினவாதம் இப்போது உச்சம் பெற்றிருக்கின்றது எனலாம்.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலையத் தமிழர்கள், முஸ்லிம்கள் என இந்தத் தீவின் சிறுபான்மையினரை எல்லாம் ஒன்று சேர்ந்து ஓரம் கட்டி விட்டு, பௌத்த, சிங்களப் பெரும்பான்மையினரை மட்டும் ஒன்று சேர்த்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்பதையும் –

அந்தப் பேரினவாத மேலாதிக்கத்தை பிரசாரப்படுத்தி, முன்னிலைக்குக் கொண்டு வந்து, அதையே கொள்கைப் போக்காகக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்தத் தீவின் ஆட்சி அதிகாரத்தை நிரந்தரமாகத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதையும் –

பெரும்பான்மையினரின் விருப்பே ஜனநாயகத்தின் தீர்ப்பு என்ற கேலிக் கூத்தான நியாயத்தின் மூலம் பேரினவாத மேலாதிக்கத்தை ஜனநாயக முறையிலான நியாயப்படுத்தலாக எப்போதும் காட்டி நின்றபடி ஆட்சி அதிகாரத்தில் தொடரலாம் என்பதையும் –

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் நன்கு புரிந்து கொண்டுள்ளன.

அது எப்போதும் வாய்ப்பாக இருக்குமா, அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு எல்லா வேளையிலும் உதவுமா என்பது கேள்விக்குறி என்றாலும் –

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கும் அவர் சார்ந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் கிடைத்த பெரு வெற்றி, அத்தகைய நம்பிக்கையைத்தான் தென்னிலங்கை அரசியலில் ஆழமாக விதைத்துச் சென்றிருக்கின்றது.

இதனால், அண்மைக் கால இலங்கை அரசியலில் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைத் தனது வெளிப்படையான கொள்கைப் போக்காக வெளிப்படுத்தாமல் ஓரவுக்கு சமரசமாக செயற்பட முயன்ற பிரதான கட்சிகளுள் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதித் தேர்தலில் பெரும் பின்னடைவைக் கண்டிருக்கிறது.

இந்தப் பட்டறிவு காரணமாகத் தனது கொள்கைப் போக்கையே தலைகீழாக மாற்றுவதற்கு அது தயாராகி வருகின்றது. பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை வெளிப்படையாகப் பேசி முன்னெடுக்கும் தனது பழைய தோற்றத்துக்குத் தன்னை மீளுருவாக்கம் செய்வதற்கு அது தயாராகி வருகின்றது.

அதன் முதல் படியாக, இதுவரை காலமும் வெளிப்படையான பேரினவாதப் போக்குக்கு இடமளிக்காமல் முட்டுக்கட்டை போட்டு வந்த அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பொறுப்புக்களில் இருந்து தூக்கி வீசப்படுகின்றார். புதிதாக தலை மைத்துவப் பொறுப்பை கட்சிக்குள் ஏற்கப் போகின்றவர்கள், மாற்றுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் முன்னெடுக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்கிலும் விடத் தீவிரமான பேரினவாத நிலைப்பாட்டை எடுக்கும் முழுத் தயார் நிலையுடன் பொறுப்புக்கு வருகின்றார்கள்.

நாட்டில் ஆயிரம் விகாரைகளைத் தரிசிப்பதுடன் அடுத்த அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என்ற ஐ.தே. கட்சியின் அடுத்த தலைவராகும் கனவுடன் இருக்கும் சஜித் பிரேமதாஸாவின் கூற்று இதனை உறுதிப்படுத்தும் ஓர் அம்சம்தான்.

பேரினவாத வெளிபடுத்தலில் ஐ.தே.கட்சி தங்களை விட முன்னிலையானது என்று சஜித் பிரேமதாஸ தலைமையில் தென்னிலங்கை மக்களுக்கு உணர்த்தப்பட்டு விட்டால், தங்களின் ஆட்சி அதிகாரத்துக்கு அதனால் ஆபத்து நேர்ந்துவிடும் எனக் கருதும் பொதுஜன பெரமுன இதனால் இந்த விடயத்தில் அதீத உஷாரில் இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை இந்தப் பேரினவாதப் பாதையில் நெறிப்படுத்தி, வழிப்படுத்தக் கூடிய பேரினவாதச் சிந்தனையாளராகவும், சிங்கள, பௌத்த மக்களினால் அதிகம் மதிக்கப்படுகின்றவருமான சம்பிக்க ரணவக்கவை ஆளும் தரப்பு போக்குவரத்துக் குற்றத்துக்காக மடக்கிச் சிறையில் போட்டு நசுக்குவதற்கு முயற்சிக்கின்றமையின் பின்னனி இதுதான்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைத் தமது கொள்கைப் போக்காக யார் அதிகம் முன்னெடுக்கப் போகின்றார்கள் என்பதில்தான் தென்னிலங்கை அரசியல் களத்தின் முடிவுகள் – தீர்மானங்கள் இனிவரும் காலங்களில் அமையப் போகின்றன என்பது கண்கூடு.

இத்தகைய பேரினவாத எழுச்சியே தென்னிலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கப் போகின்றதாயின் –

அதற்கு எதிராக சிறுபான்மையினரின் கட்சிகள் எல்லாம் – தமிழர்கள், மலையகத்தமிழர்கள், முஸ்லிம்கள் என்று – தமக்குள் வேறுபாடு காட்டாமல் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தில் கட்டாயம். தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடப்பாடு.

அதைப் புரிந்து முன்னெடுக்க சிறுபான்மை இனத்தவர்களும், அவர்களது கட்சிகளைச் சேர்ந்தோரும், அவற்றின் தலைவர்களும் தயாரா?

ஒன்றிணைந்தால் அரசியல் பேராபத்தை எதிர்கொள்ளலாம். இல்லையேல் நம் அனைவருக்குமே வீழ்ச்சிதான்!

# சிறுபான்மை கட்சிகளுடன் களமிறங்க சஜித் பிரேமதாஸ மந்திராலோசனை!

கொழும்பு, டிசெ. 24

ஐ.தே.க. தலைமைத்துவம் தொடர்பான தெளிவாக முடிவு எடுக்கப்படாவிட்டால், தனி அணியாகத் தேர்தலில் களமிறங்கும் ஏற்பாடுகளையும் சஜித் பிரேமதாஸ செய்து வருகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களுடன், சிறுபான்மையின கட்சிகளுடன் கூட்டாகத் தேர்தலில் களமிறங்க அவர் வியூகம் வகுத்து வருகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.தே.கவின் பின்வரிசை எம.பிக்கள் முழுமையாக சஜித்தை ஆதரிக்கிறார்கள். தற்போது ஐ.தே.க தரப்பில் 78 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இதில் மிகப்பெரும்பாலானவர்கள் சஜித் அணியுடனேயே இருக்கிறார்கள்.

தனது ஆதரவு எம்.பிக்களுடன், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவற்றையும் இணைத்து கூட்டணியாகக் களமிறங்கும் பேச்சுக்களில் சஜித் தரப்பு இறங்கியுள்ளது.



கட்சி தலைமைப் பதவி வழங்கப்படாவிட்டால், ஐ.தே.கவின் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கமாட்டேன் என சஜித் உறுதியாக அறிவித்து விட்டார். எனினும், அவருக்கு அந்தப் பொறுப்பை வழங்காமல் தட்டிக்கழிப்பதில் ரணில் தரப்பு தொடர்ந்து ஈடுபடுவதால் சஜித் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. (ஐ)

# கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படாவிடின் போராட்டம்

## கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 24

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தித் தராவிட்டால் அம்பாறையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஒன்றுதிரட்டி போராடவுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

அம்பாறை மாவட்டத்தில் அடிப்படைத் தேவையாக தமிழ் பகுதிகளில் மூன்று பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் இருக்கின்றன.

புதிய பிரதேச செயலகங்களை உருவாக்க வேண்டிய கடப்பாடுகளில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும். பொத்துவில் பிரதேசத்தில் கோமாரியை மையமாகக்கொண்டு ஒரு பிரதேச செயலகமும், சம்மாந்துறை பிரதேசத்தில் மல்வத்தையை அடிப்படையாக கொண்டுபிரதேச செயலகமும் உருவாக்கப்படவேண்டிய அவசியப்பாடு அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகிறது.

இதற்குக் காரணம் எங்களது நிலம் ஆக்கிரமிக்கப்படுவதாகும். எமது பொருளாதார வளம் சுரண்டப்படுகிறது. திட்டமிடப்பட்ட முறையில் ஏனைய சமூகங்களால் அழிக்கப்படும் கலை, கலாசாரம், கல்வி மற்றும் தேசியத்தை பாதுகாப்பதற்கு புதிய பிரதேச செயலகங்கள் அவசியம். அவை உருவாக்கப்படும் போது நாம் தன்னிறைவு பெற்ற சமூகமாக மாற்றம் பெறமுடியும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவற்காக நாங்கள் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பிரதேச செயலகத்தை தரமுயர்த்திக் கொடுக்க வேண்டும் என கடந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடம் பலதரப்பட்ட பேச்சுகளை நடத்தியிருந்தோம். பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தரமுயர்த்தித் தருவதாக இறுதிவரை சொல்லி எங்களை ஏமாற்றி விட்டது.

தேர்தல் காலத்தில் பிரதமர் மஹிந்த பிரசார மேடைகளில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்குமாறு வாக்குக் கேட்டார். மக்கள் அதற்கு இசைந்து கணிசமாக வழங்கினர்.

ஜனாதிபதியானால் மூன்று நாள்களில் தரமுயர்த்தி கொடுக்கப்படும் என்று முழங்கினர். ஆனால் மாதங்கள் கடந்தும் தரமுயத்தப்படவில்லை. இன்று கூட கல்முனை பிரதேச செயலக விடயம் எட்டாக்கனியாகவே காணப்படுகின்றது.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தவர். இன்று மக்களை திசை திருப்புகின்ற போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை பேசும் பொருளாக, தேசியப் பிரச்சினையாக, சர்வதேச பிரச்சினையாகக் கொண்டு வந்தவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பதை மறந்துவிட கூடாது – என்றார். (ஐ)

# இரணைமடு வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 24

இரணைமடு குளத்தின் 10 வான்கதவுகள் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளன.

இதன்படி 04 வான் கதவுகள் 6 அங்குலம் வரையிலும், 04 வான் கதவுகள் 1 அடி வரையிலும், ஒரு வான் கதவு 1.6 அடி வரையிலும் திறந்துவிடப்பட்டுள்ளன என நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குளத்தின் அடைவு மட்டம் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வருவதாகவும், நீர்வருகை அதிகரிக்கும் பட்சத்தில் வான் கதவுகள் மேலும் திறந்து விடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



தாழ்நில பகுதிகளில் உள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் இடர் முகாமைத்துவ நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

## நாளை

**25.12.2019 – புதன்கிழமை**

திதி : சதுர்த்தசி மு.ப 11.51 வரை
நட்சத்திரம்: கேட்டை சித்தம் மாலை 5.35 வரை
இராகுகாலம் : 12.26 – 1.56
சுப நேரம் : 4.56 – 6.26

## நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் நடுப் பகுதியில்

கொழும்பு, டிசெ. 24
மார்ச் மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக் கப்படும் எனவும், ஏப்ரல் நடுப் பகுதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஓரணியில் நின்று போட்டியிடும். இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார் – என்றார். (ஐ)

## ராஜிதவின் முன்பிணை; 30 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, டிசெ. 24
முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள முன்பிணை கோரிக்கை மனு எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

முன்னதாக, நேற்று மூன்றாவது முறையாக முன்பிணை கோரி ராஜித சேனாரத்ன மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்வதை தவிர்த்துக்கொள்ளும் வகையில், முன்பிணை கோரி மனு ஒன்றை கடந்த 19ஆம் திகதி ராஜித சேனாரத்ன தாக்கல் செய்திருந்தார்.

இந்தப் பிணை மனு மீதான விசாரணையின் பின்னர் அந்த மனு நிராகரிக்கப்பட்டது. அன்று மாலை மீண்டும் பிணை கோரி ராஜித சேனாரத்ன மனுத்தாக்கல் செய்தார். இதனையடுத்து, ராஜித சேனாரத்ன, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்தார்.

இதன்போது, அவரது இரண்டாவது முன்பிணை மனு ஆராயப்பட்டு அது நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்தே, ராஜித சேனாரத்ன மீண்டும் மூன்றாவது முறையாக முன்பிணை தாக்கல் செய்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் தன்னைக் கைது செய்வதற்காக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தயாராகி வருவதாக தனது முன்பிணை மனுவில் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகத் தன்னை கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், அவ்வாறு கைது செய்வதற்கு முன்னர் தன்னை முன்பிணை அடிப்படையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## 3 அரச நிறுவனங்களுக்கு தலைவர்கள் நியமனம்

அரச நிறுவனங்கள் இரண்டுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அரசு அறிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவராக கமல் சேனக ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்..

இலங்கை தேயிலைச் சபைக்கும் புதிய தலைவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன் தலைவராக ஜயம்பதி மொல்லிகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வைத்தியர் பிரசன்ன குணசேன நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# எம்.பிக்களைக் கைது செய்வதற்கா ஆணை பெற்றது கோட்டா அரசு?

### கேள்வி எழுப்புகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 24
எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான மக்களை ஆணையை ஜனாதிபதித் தேர்தலில் அரசு பெற்றிருக்கிறதா என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவை வெலிக்கடைச் சிறையில் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டிருப்பது நாட்டின் ஆட்சியாளர்கள் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவர்கள் மேற்கொண்ட பழிவாங்கும் வேட்டையை, மீண்டும் தொடங்கியிருப்பதற்கான அறிகுறியை வெளிப்படுத்தியிருக்கிறது.

ரணவக்கவைக் கைது செய்வதை விட, அரசு சிந்திக்கவேண்டிய வேறு பல பிரச்சினைகள் உள்ளன.

உண்மையான பிரச்சினை என்னவென்றால், முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனத்துடன், மோதி விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் ஓட்டி, 1,000 சிசி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார், இது இலங்கையில் தடை செய்யப்பட்டது.

அவரே வேகமாக வந்து சம்பிக்க ரணவக்கவின் வாகனத்துடன் மோதினார் – என்றார். (ஐ)

## எக்னெலிகொடவின் கடத்தலுக்கு சம்பிக்கவே முழுப் பொறுப்பாம்!

### குற்றம்சாட்டுகிறார் மேஜர் அஜித் பிரசன்ன

கொழும்பு, டிசெ. 24
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட சம்பவத்துக்கு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே பொறுப்பு எனப் பதில் பொலிஸ்மா அதிபரிடம் தாம் கடந்த 21ஆம் திகதி முறைப்பாடு செய்திருக்கிறார் எனச் சட்ட வாளரும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த முறைப்பாட்டில் மூன்று முக்கிய விடயங்கள் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன்படி, சம்பிக்க ரணவக்கவைக் கைது செய்து விசாரித்தால் கடத்தல் சம்பவத்தின் உண்மை வெளிப்படும்.

ரணவக்கவின் நடத்தை குறித்து 2009 டிசெம்பர் 8 ஆம் திகதி லங்கா 'இ நியூஸ்' இணையதளத்தில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது, அதில், பிரகீத் எக்னெலிகொட மீது சம்பிக்க ரணவக்க கோபமாக இருப்பதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

ரணவக்கவின் மனைவி நிர்மலா, 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எக்னெலிகொடவைச் சந்தித்தார் என்றும், ரணவக்க தன்னை எவ்வாறு துன்புறுத்தினார் என்பது பற்றிய தகவல்களை அவருக்கு வழங்கினார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரை வெளியான பின்னர், அதனை எழுதியவரைக் கண்டு பிடிக்க சம்பிக்க மூன்று நாள்களைச் செலவழித்தார் என்று உதயகம்மன்பில செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கூறியிருந்தார்.

இந்த ஊடகச் சந்திப்பு பற்றிய செய்தி மௌபிம நாளிதழில் வெளியான பின்னர், மௌபிம மீதும், உதய கம்மன்பில மீதும் சம்பிக்க ரணவக்க வழக்குத் தாக்கல் செய்தார். பின்னர் அந்த வழக்கை விலக்கிக் கொண்டார்.

இந்த உண்மைகள் அனைத்தும் எக்னெலிகொட கடத்தலுடன் சம்பிக்க ரணவக்க தொடர்புபட்டுள்ளார் என்பதைக் குறிக்கின்றன. இந்த விடயங்கள் அனைத்தும் முறைப்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆனால், எக்னெலிகொடவைக் கடத்தினர் என ஒன்பது போர் வீரர்கள் மீது சிறப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ரணவக்க இந்த வழக்கில் இருந்து விடுபட்டுள்ளார் – என்றார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், டிச.24
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை –**

**வவுனியா பிரதேசத்தில் –**

சூடுவெந்தபுலவு கிராமம், செட்டிகுளம் நகரம், ஒட்டறங்குளம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## பூஜித், ஹேமசிறியின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 24
கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 06ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காத குற்றச்சாட்டில் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# கிறிஸ்மஸ் பண்டிகையை எளிமையாக கொண்டாட அழைக்கின்றார் பேராயர்



இலங்கை கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை இம்முறை எளிமையாகக் கொண்டாடவேண்டுமென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுள்ளார்.

கிறிஸ்தவ மதம் இதனைத் தான் போதித்துள்ளது என்பதாலும், ஏப்ரல் மாதம் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாலும் நாம் இவ்வருடம் எளிமையைக் கடைப்பிடிக்கவேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலில் 300 பேர் வரை கொல்லப்பட்டமையுடன் நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். அண்மைக் காலத்தில் உலக சரித்திரத்தில் இடம்பெற்ற மோசமான படுகொலைச் சம்பவம் இதுவாகும். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிலர் இப்போதும் மயக்க நிலையிலேயே உள்ளனர். சிலர் வைத்தியசாலைகளிலேயே உள்ளனர். பல குடும்பங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் உள்ளன என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் கூறினார்.

மேற்படி ஈஸ்டர் தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு வாய்ப்பாக இந்த கிறிஸ்மஸ் தினத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறும், இம்முறை கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது அரசு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் கர்தினால் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



# டெல்லி துணிக் களஞ்சியத்தில் திடீரெனத் தீ! 9 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி,டிசெ.24

டெல்லியில் உள்ள துணிக் களஞ்சியம் ஒன்றில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் திடீரெனப் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் 9 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, தீ முழுவதுமாக அணைக்கப் பட்டுவிட்டதாக முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றன.

நான்கு மாடிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் திடீரெனப் பற்றிய தீ மளமளவென மூன்றாம் மாடி வரைப் பரவியதாகக் கூறப் படுகின்றது.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து இன்னும் முழுமையான தகவல்கள்




கிடைக்கவில்லை. ஆனால் திடீரென ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடிப்பே காரணம் என்று ஊடகச் செய்தி ஒன்று தெரிவித்தது.



## நைஜீரியக் கடலில் கடற்கொள்ளையரால் கடத்தப்பட்ட 18 இந்தியர்கள் விடுதலை

புதுடெல்லி,டிசெ.24

நைஜீரிய கடல் பகுதியில் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 18 இந்தியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

நைஜீரிய கடல் பகுதியில் ஹொங்கொங் கொடியுடன் 'வி.எல்.சி.சி. நேவ் கொன்ஸ்டிலேன்' என்ற கப்பல் நைஜீரிய கடற்பகுதியைக் கடக்கும்போது கடந்த 3 ஆம் திகதி கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. அந்தக் கப்பலில் 18 இந்தியர்கள் உள்பட 19 பேர் இருந்தனர்.

கடத்தப்பட்ட ஹொங்கொங் கப்பலில் இந்தியர்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து, நைஜீரியாவில் உள்ள இந்தியத் தூதரகம் அந்நாட்டு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கடத்தப்பட்ட இந்தியர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில், கடத்தப்பட்ட 18 இந்தியர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என நைஜீரியாவில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நைஜீரியாவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட் பதிவில், நைஜீரியாவின் கடற்படை மற்றும் கப்பல் நிறுவனம், பணையக்கைதிகளாக பிடிக்கப்பட்டு இருந்த 18 இந்தியர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளமையை உறுதிசெய்துள்ளது. இந்தியர்கள் பாதுகாப்பாக மீட்பதற்கு உதவிகரமாக இருந்த அனைத்து தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## நாளை கிறிஸ்துமஸ் தினத்தன்று டெல்லியை கடும் குளிர் வாட்டும்



தலைநகர் டெல்லியில், நாளை 25ஆம் திகதி கிறிஸ்துமஸ் தினத்தன்று மிக கடுமையான குளிர் வாட்டியெடுக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருக்கிறது.

டெல்லி, உத்திரப்பிரதேசம், அரியானா உள்ளிட்ட வட மாநிலங்களில், அண்மை நாட்களாக கடுங்குளிர் வாட்டியெடுத்து வருகிறது. சில நாட்களாக, கடுமையான பனிமூட்டம் நிலவுவதால், ரயில், விமான போக்குவரத்து காலதாமதமாக நடைபெறுகிறது.

இந்நிலையில், இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், டெல்லியில், நாளை 25ஆம் திகதி, அதிகப்பட்ச வெப்ப நிலை 57 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 47 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும் என்றும், கூறியிருக்கிறது.

எனவே, அன்றைய தினம், தலைநகரில், மிக கடுமையான குளிர் நிலவும் என்றும், பொதுமக்கள் கவனமுடன் இருக்குமாறும், எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

## என்கவுண்டரில் கொல்லப்பட்ட 4 பேரின் சடலங்கள் மீது மீள பிரேத பரிசோதனை



ஹைதராபாத் பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்டு என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரின் உடல்களும், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் தடயவியல் நிபுணர்கள் குழுவால் மறுபிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

ஹைதராபாத்திலுள்ள காந்தி அரசு மருத்துவமனையில் இந்தப் பிரேத பரிசோதனை நடைபெற்றாலும், அங்குள்ள மருத்துவர்கள் யாரும் அதில் பங்கேற்பதற்கு அழைக்கபடவில்லை. முழுவதுமாக டெல்லி குழுவினர் மட்டுமே இடம்பெற்றிருந்தனர்.

இந்த முழுப் பிரேத பரிசோதனையும் வீடியோவாக பதிவு செய்யப்பட்டு, தெலுங்கான உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் சமர்பிக்கப்பட உள்ளது.

மறுபிரேத பரிசோதனைக்கு பின்னர் நால்வரது உடல்களும் அவரவர் குடும்பத்தினரிடம் ஒப் படைக்கப் பட உள்ளன.

முதலாவதாக மஹபூப்நகர் அரசு மருத்துவமனையில் உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 4 உடல்களும், அங்குள்ள அரசு மருத்துவக்கல்லூரியில் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக சென்னையில் தி.மு.க. பேரணி





குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, சென்னையில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் பேரணி நடைபெற்றது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு எதிராக பல்வேறு மாநிலங்களில் வன்முறை வெடித்தது.

வடகிழக்கு மாநிலங்களில் போராட்டங்கள் வலுப்பெற்றன. டெல்லி, உத்தரபிரதேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. உயிரிழப்புகளும் நிகழ்ந்தன.

தமிழகத்திலும் குடியுரிமை சட்டத்துக்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது. தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குடியுரிமை சட்டத்தை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இது தொடர்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்றன. இந்தக் கூட்டத்தில் குடியுரிமை சட்டத்துக்கு எதிராக பேரணி நடத்த முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பேரணிக்கு அனுமதி கேட்டு தி.மு.க. சார்பில் பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. ஆனால் பொலிஸார் பேரணிக்கு அனுமதி அளிக்கவில்லை.

இருப்பினும் தடையை மீறி திட்டமிட்டபடி பேரணி நடைபெறும் என்று தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே பேரணிக்குத் தடைவிதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வாராகி என்பவர் வழக்கு தொடர்ந்தார்.

இதனை விசாரித்த உயர்நீதிமன்றம் தி.மு.க. பேரணிக்குத் தடை விதிக்க மறுத்துவிட்டது. அதே நேரத்தில் அமைதியான முறையில் பேரணியை நடத்த வேண்டும் என்றும் வன்முறை ஏற்பட்டால் தலைவர்களே பொறுப்பு என்றும் நீதிபதிகள் கூறினார்கள்.

இதனை தொடர்ந்து தி.மு.க. பேரணி நேற்றுத் திட்டமிட்டபடி சென்னையில் நடைபெற்றது.

கூட்டணி கட்சிகளான ம.தி.மு.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு கட்சிகள், மனித நேய மக்கள் கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

பேரணியில் பங்கேற்க 98 அமைப்புகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. இதில் பல அமைப்புகளை சேர்ந்தவர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் உடனடியாகப் பேரணி தொடங்கியது.

முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம், காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர்அல்போன்ஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர்மொய்தீன் ஆகியோர் பேரணியில் கலந்துகொண்டனர்.

# அமெ. அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு




வொஷிங்டன்,டிசெ.24

அமெரிக்காவில் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 6 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் நிவாடா மாகாணத்தில் உள்ள லொஸ் வேகாஸ் நகரில் மூன்று மாடிகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட வீடுகளில் சுமார் 70 பேர் வசித்து வந்தனர்.

சனி இரவு இந்த அடுக்குமாடி குடியிருப்பில் திடீரெனத் தீப்பிடித்தது. கீழ் தளத்தில் பற்றிய தீ, மளமளவென அடுத்தடுத்த மாடிகளுக்கும் பரவியது.

இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினர். சிலர் ஜன்னல் வழியாக குதித்து உயிர் தப்பினர். ஆனாலும் சில வீடுகளில் தீ நாலாபுறமும் சூழ்ந்து கொண்டதால் பலர் உள்ளே சிக்கிக் கொண்டனர்.

இதற்கிடையே விபத்துக் குறித்துத் தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரைப்பீய்ச்சியடித்துதீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் தீயில் கருகி 6 பேர் பலியாகினர். மேலும் 13 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

அவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். மேலும் இந்த தீவிபத்தில் வீடுகளில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்பட்டு வந்த இரு பூனைகள் மற்றும் ஒரு நாய் செத்தன.

# இரவில் எரிமலைக் குழம்பினால் ஒளிரூட்டபட்ட ஈக்வடோர் மலை



ஈக்வடாரில் பயங்கர சத்தத்துடன் வெடித்த ரெவெண்டடோர் (Reventador) எரிமலை இரவு நேரத்தில் ரம்மியமாகக் காட்சியளித்தது.

அந்நாட்டின் அமேசான் பிராந்தியத்தில் அமைந்துள்ள எரிமலைகளில் ஒன்று ரெவெண்டடோர். அது நேற்றுமுன்தினம் இரவு திடீரென வெடிக்கத் தொடங்கியது. மேலும் அதில் இருந்து வெளியேறிய வெப்பம் மிகுந்த இளஞ் சிவப்பு நிற லாவா மலையின் மேற்பரப்பில் வழிந்தோடியது. இரவு நேரத்தில் இந்த காட்சி, எரிமலையையும் அதன் பாறைகளையும் ஒளிரூட்டியது போன்று தோற்றமளித்தது.

இதற்கு முன்பு 2002 ஆம் ஆண்டு இந்த ரெவெண்டடோர் எரிமலை வெடித்ததில் உருவான சாம்பல் மேகங்கள் 20 லட்சம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

# பத்திகையாளர் ஜமால் கசோகி கொலை; 5 பேருக்குத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு!

## மூன்று பேருக்கு தலா 24 ஆண்டுகள் சிறை



ரியாத்,டிசெ.24

பத்திகையாளர் ஜமால் கசோகி கொலைவழக்கில் 5 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. 3 பேருக்கு தலா 24 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

பத்திரிகையாளர் ஜமால் கசோகி கொல்லப்பட்டமை மிகப்பெரிய தவறுதான். அதே நேரம் இதில் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லை என சவுதி அரேபியா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எண்ணெய் வளம் மிகுந்த அரபு நாடான சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர் ஜமால் கசோகி. 59 வயதான இவர் அமெரிக்காவின் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் கட்டுரைகளை எழுதி வந்தார். அவர் தனது கட்டுரைகளில் சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் குறித்தும், அந்நாட்டின் மன்னராட்சி முறை பற்றியும் கடுமையாக விமர்சித்து எழுதி வந்தார். இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த அக்டோபர் 2 ஆம் தேதி சென்ற அவர் மாயமானார்.

ரியாத் நகரில் இருந்து அனுப்பப்பட்ட 15 ஏஜெண்டுகள் கொண்ட குழு ஒன்று அவரை கொன்று தூதரகத்தில் வைத்து பல துண்டுகளாக்கியது. அவரது உடல் இதுவரை கண்டறியப்படவில்லை. கசோகிக்கு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் என 4 வாரிசுகள் உள்ளனர்.

கசோகிதிட்டமிட்டுகொலைசெய்யப்பட்டுள்ளார் எனதுருக்கி அதிபர் எர்டோகன் குற்றம் சாட்டினார். அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்த பிறகு சவுதி அரேபிய அரசு சம்பவத்தை ஒப்புக்கொண்டது.

இதை தொடர்ந்து சவுதி அரசு விசாரணை நடத்தியது. பத்திரிகையாளர் ஜமால் கசோகி கொலை செய்யப்பட்ட வழக்கில் 11 பேர் குற்றவாளிகள் என்று சவுதி நீதிமன்றம் கண்டறிந்தது.

இதை தொடர்ந்து ஐந்து பேர் தூக்கிலிடப்படுவார்கள், மேலும் மூன்று பேர் தலா 24 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் ரியாத்தில் உள்ள அரசு வக்கீல் அலுவலகத்தில் நேற்று வாசிக்கப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கான் அதிபர் தேர்தலில் அஷ்ரப் கனி மீண்டும் வெற்றி

காபூல்,டிசெ.24

ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தலில் அஷ்ரப் கனி மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இது அந்த நாட்டு அரசுக்குப் பெரும் தலைவலியாக உள்ளது. அமைதிப் பேச்சு மூலம் இந்த உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர அந்த நாட்டு அதிபர் அஷ்ரப் கனி தீவிர முனைப்பு காட்டி வருகிறார்.

இதற்கிடையே அஷ்ரப் கனியின் பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி கடந்த மார்ச் மாதமே அங்கு அதிபர் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் அந்தத் தேர்தல் ஜுலை 28 ஆம் திகதிக்கும் அதன் பின்னர் மீண்டும் செப்டம்பர் 28 ஆம்திகதிக்கும் என இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி கடந்த செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடந்தது. தேர்தலைச் சீர்குலைப்போம் எனத் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தமையால் மக்கள் பலர் உயிருக்குப் பயந்து வாக்குப் போடுவதைத் தவிர்த்தனர்.

இதனால் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே வாக்குகள் பதிவாகின. அதே சமயம் பெரிய அளவில் அசம்பாவிதங்கள் இல்லாமல் தேர்தல்



நடந்து முடிந்தது.

ஒக்டோபர் முதல் வாரத்திலேயே தேர்தல் முடிவுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதில் தாமதம் ஏற்பட்டது. வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதே தாமதத்துக்கு காரணம் என்று தேர்தல் ஆணையம் கூறியது.

அதே சமயம் தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறி எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டமையும் வாக்கு எண்ணிக்கையைத் தாமதப்படுத்தியது. தேர்தல் முடிவுகள் எப்போது அறிவிக்கப்படும் என்பதை தெரிவிக்காமல் தேர்தல் ஆணையம் மௌனம் காத்து வந்தது.

இந்தநிலையில் தேர்தல் நடந்து முடிந்து 3 மாதங்களுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் அதிபர் அஷ்ரப் கனி 50.64 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார் என அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் அஷ்ரப்கனி தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆப்கானிஸ்தான் அதிபராகி இருக்கிறார். அவர் விரைவில் பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் அஷ்ரப் கனியை எதிர்த்துப் போட்டியிட்ட ஆப்கானிஸ்தான் தேசிய கூட்டணி கட்சியின் தலைவர் அப்துல்லா 39.52 சதவீத வாக்குளை மட்டுமே பெற்று வெற்றி வாய்ப்பை நழுவவிட்டார்.

எனினும் தற்போது அறிவிக்கப்பட்டு உள்ள தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது என அப்துல்லா தெரிவித்துள்ளார். அவர் இந்த தேர்தல் முடிவுகளை எதிர்த்து நீதிமன்றில் மேன்முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

50 சதவீத வாக்குளை பெற்றால் வெற்றி என்கிற நிலையில் அஷ்ரப் கனி 50.64 சதவீத வாக்குகளை பெற்று நூலிழையில் வெற்றி பெற்று இருக்கிறார்.

ஒருவேளை இந்த தேர்தலில் அதிபர் வேட்பாளர்கள் இருவருமே 50 சதவீதத்துக்கும் குறைவான வாக்குளை பெற்றிருந்தால் அவர்கள் 2ஆவது கட்டத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகி இருக்கும். ஆனால் தற்போது அதற்கு அவசியம் இல்லை.

# தேர்தலில் வென்ற பிரி. பிரதமரை அமெ. வருமாறு டிரம்ப் அழைப்பு



வொஷிங்டன்,டிசெ.24

அமெரிக்கா வருமாறு பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சனுக்கு, அமெரிக்க அதிபர் டிரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

இங்கிலாந்தில் 'பிரெக்ஸிட்'டை முன்னிலைப்படுத்தி அண்மையில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் பழமைவாதக் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்றது.

இதையடுத்து, பொறிஸ் ஜோன்சன் மீண்டும் பிரதமராகி உள்ளார். அடுத்த மாதம் ஜனவரி 31 ஆம் திகதிக்குள் 'பிரெக்ஸிட்'டை நிறைவேற்ற அவர் தீவிர முனைப்புக் காட்டி வருகிறார்.

இந்தநிலையில் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவுக்கு வருமாறு பிரதமர் பொறிஸ் ஜோன்சனுக்கு ஜனாதிபதி டிரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

டிரம்பின் இந்த அழைப்பை பொறிஸ் ஜோன்சன் ஏற்றுக் கொண்டார் எனவும், அமெரிக்க பயணத்துக்கான திகதி குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவுன் இங்கிலாந்து அரசு வட்டந்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தை கொதிநிலையிலேயே பேணும் முயற்சி!



வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களை கொதி நிலையில் வைத்திருக்க விரும்பும் கொழும்பு நிர்வாகம்

யாழ் சிறைச்சாலைக்கு முன்பாக நடந்த குழப்பத்திற்குக் காரணம் யார்?

வடக்குக் கிழக்குத் தாயக மக்களைப் பிரதான அரசியல் மையக்கருத்தில் இருந்து திசை திருப்பும் அரசியல் சதி முயற்சிகள் வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன எனச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தர் சிலைகள் வைத்தல், காணி அபகரிப்பு, சட்டவிரோத மண் அகழ்வு என நீடித்துத் தற்போது இலங்கைக்கு விஜயன் வந்த வரலாறுகளையும் சங்கமித்தையின் உருவச் சிலையையும் தாயகப் பிரதேசங்களில் இலங்கைப் படைகளின் ஒத்துழைப்புடன் நிறுவி ஈழத் தமிழ் மக்களை ஆத்திரமடையச் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் ஆரம்பித்த இந்த உத்தி 2015 ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் அரசாங்கத்தில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் கொழும்பை மையப்படுத்திய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஊடாக விரிவாக்கம் செய்யப்பட்டன.

இந்த விரிவாக்கம் சென்ற நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான சூழலில் இலங்கை அரசாங்கத்தின் கட்டளைகளாக மாற்றமடையவுள்ளன எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாகவுள்ள சுவரில் இலங்கைக்கு விஜயன் வந்த வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியங்களும் சங்கமித்தையின் உருவச்



சிலையும் இரவோடு இரவாக வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் சனிக்கிழமை காலை மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளமையை அறிந்து அந்த உருவச் சிலை அகற்றப்பட்டுள்ளது. ஆனால் வரையப்பட்ட ஓவியம் அப்படியே உள்ளது.

யாழ் சிறைச்சாலை அதிகாரிகளின் உத்தரவுக்கு அமைவாகவே ஓவியம் வரையப்பட்டு சங்கமித்தையின் உருவச் சிலையும் வைக்கப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சம்பவ இடத்தில் நின்றுபகிரங்கமாகவேகுற்றம்சுமத்தியுள்ளார்.

எனவே யாழ் மாநகர சபையும் சிறைச்சாலைச் சுவரில் சங்கிலிய மன்னனின் வரலாற்றைக் கூறும் ஓவியம் ஒன்றை வரைய வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் சிறைச்சாலை கட்டடத் தொகுதி அமைந்துள்ளது. யாழ் நகரத்தின் முக்கிய பிரதேசமாகப் பண்ணைப் பகுதி விளங்குகின்றது. ஆகவே அவ்வாறான முக்கியமான இடமொன்றில் இவ்வாறான உருவச்சிலைகளை வைத்துப் பின்னர் அதனை விகாரையாக மாற்றுவதே திட்டமென மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிறைச்சாலைக்கு உள்ளே இருந்த இந்தச் சிலை வெள்ளிக்கிழமை இரவு சிறைச்சாலைக்கு வெளியே எடுத்து வரப்பட்டது. அந்தச் சிலை மூடித் துணியால் கட்டப்பட்டிருந்தது. சங்கமித்தை தோணியின் மூலம் மாதகல் கரையில் வந்திறங்கிய காட்சி சிறைச்சாலையின் சிலை வைக்கப்பட்ட இடத்தில் வரையப்பட்டுமுள்ளது.

சம்பவத்தை அறிந்து அந்த இடத்தில் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்களும் பொது மக்களும் ஒன்று கூடினர். அவர்களின் எதிர்ப்பால் சர்ச்சைக்குரிய சிலை அந்த இடத்திலிருந்து சிறைச்சாலைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. ஆனாலும் வரையப்பட்ட ஓவியம் அப்படியே உள்ளது.

ஆகவே நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிச் சிந்தித்துத் தமது அரசியல் கருத்துக்களை பலமடையச் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில், இவ்வாறான அத்துமீறல் செயற்பாடுகளில் இலங்கைப் படையினரின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்க அதிகாரிகள் ஈடுபட்டுத் திசை திருப்புகின்றனர் எனச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் குற்றம் சுமத்துகின்றனா.

இவ்வாறான அத்துமீறல்கள் ஒவ்வொன்றுக்காகவும் போராட்டம் நடத்தி மக்கள் களைத்துவிட்டால், அவர்களிடம் இருக்கும் பிரதான அரசியல் மையக்கருத்தை நீக்கம் செய்துவிடலாமென்றே கொழும்பில் உள்ள இலங்கை அரசாங்கமும் சிங்கள அரசியல்வாதிகளும் நம்புகின்றனர் போலும்.

போரின் பக்கவிளைவுகளான அரசியல் கைதிகள் விடுதலை, மீள் குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் மக்கள் தீர்வைத் தேடி அலையும் நிலையில், காணி அபகரிப்பு, புத்தர் சிலை வைத்தல், புத்தவிகாரை கட்டுதல், பௌத்த மரபுரிமைச் சின்னங்களை வெளிப்படுத்தும் ஓவியங்களை வரைதல் போன்ற புதிய புதிய சர்ச்சைகளைத் தோற்றுவித்துத் தாயகப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களை இலங்கை அரசாங்கம் போராட்ட மன நிலைக்குத் திட்டமிட்டுத் தள்ளுவதாகவே அவதானிகள் கருதுகின்றனர்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கைகளும் முகாம்களும் குறைக்கப்படவேயில்லை. இவ்வாறான நிலையில் அங்கு மக்களை ஆத்திரமடையச் செய்யும் புதிய புதிய விவகாரங்களை உருவாக்கிப் பின்னர் அவற்றைச் சர்ச்சைகளாக்கித் தாயகப் பிரதேசங்களில் கொதி நிலை ஒன்றைத் தொடர்ச்சியாகப் பேணுவதையே சிங்கள ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர்.

இதனையே சமீபகாலச் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் போராட்டக் குணங்கள் வலிந்து உருவகப் படுத்தப்படுகின்றன எனச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.









யாழ் நகரை சுகாதார மயமாக்கல் திட்டத்தின் கீழ் தொற்று நோய்களை குறைப்பதற்குப் பல்வேறுபட்ட துறைகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல் யாழ். வலம்புரி விருந்தினர் விடுதியில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபிதி டாக்டர் எஸ். ரவிராஜ் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபையின் முதல்வர் இ.ஆர்னோல்ட், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ந.வேதநாயகன், மாகாணப் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன்,உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டாக்டர் ரஸ்யா பென்ட்ஸ், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்திய மூர்த்தி ஆகியோர் உரையாற்றினார்கள். யாழிலுள்ள பல்வேறு அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.





# சீரற்ற காலநிலையால் 65,316 பேர் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 24

நாட்டில் கடந்த சில நாள்களாக நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 19 ஆயிரத்து 072 குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரத்து 316 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 10 ஆயிரத்து 105 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 591 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 920 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 755 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் 5 ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 836 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஊவா மாகாணத்தில் ஆயிரத்து 623 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 915 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், மத்திய மாகாணத்தில் 696 குடும்பங்களைச் சேர்ந்த 2,359 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# செம்மணியில் சிரமதானம்







யாழ்ப்பாணம், டிசெ. 24

பிரதேசத்தின் தூய்மையைப் பேணுவோம் எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகச் செம்மணி இந்துமயானத்தில் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மக்கள் ஆதரவு மையத்தின் அனுசரணையுடன் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பா.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செம்மணி இந்துமயான சபையின் தலைவர் லயன்.சி.லட்சுமிகாந்தன்,வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பிரதேச இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சிரமதானப் பணியில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஊழியர்கள் உழவு இயந்திரம் மூலம் குப்பைகளை அகற்றியமையுடன், புல்லு வெட்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி வளாகத்தை துப்பரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டனர்.

ஆரம்ப கட்டமாக இறுதிச் சடங்குகள் செய்யக் கூடியவகையில் செம்மணி இந்து மயானத்தின் முக்கிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளமையுடன் ஏனைய பகுதிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ள சிரமதான பணிகள் மூலம் துப்புரவு செய்யப்படும் என வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் தெரிவித்தார். (ஐ - 07)

# பௌத்த பிக்குகள் தேர்தலில் களமிறங்க வாய்ப்பளிக்காதீர்!

## கட்சிகளிடம் மல்வத்த அனுநாயக்கர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டியிடுவதற்கு அரசியல் கட்சிகள் வாய்ப்பு வழங்கக்கூடாது என்று மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரர் வண. திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்துவதன் மூலமும், தங்கள் பொறுப்புகளை முறையாகச் செய்வதன் மூலமும், பௌத்த பிக்குகள் நாட்டுக்கும், தேசத்துக்கும், மதத்திற்கும் ஒரு சிறந்த சேவையை வழங்க முடியும்.

எமது பிக்குகள் அரசியல் காரணமாக மனக்கிளர்ச்சியுடன் செயற்படுகிறார்கள்.



உலகெங்கிலும் உள்ள பௌத்த பிக்குகளின் மரியாதையும் புகழும் பாதிப்படையத் தொடங்கியுள்ளது. எனவே, பிக்குகளை அரசியலில் சேர்த்துக் கொள்ளவேண்டாம்.

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற முடிவை எடுக்க வேண்டும். பௌத்த பிக்குகள் நாட்டின் தலைவர்களுக்கு சரியான பாதையை காட்ட வேண்டும் – என்றார். (ஐ)

# மிலேனியம் சவால் மீளாய்வுக் குழு தலைவருக்கே தெரியாத ஆணை!

*கொழும்பு, டிசெ. 24*

மிலேனியம் சவால் நிறுவன உடன்பாட்டை, மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவுக்கு, அதன் நோக்கம் மற்றும் அதன் ஆணையின் கால எல்லை குறித்து இன்னமும் தெரிவிக்கப்படவில்லை, என்று கொழும்பு ஆங் கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னைய அரசின் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மிலேனியம் சவால் உடன்பாட்டை இடைநிறுத்தி வைக்கத் தற்போதைய அமைச்சரவை முடிவு செய்ததுடன், இந்த உடன்பாட்டை மீளாய்வு செய்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நான்கு பேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்தது.

இந்த நிலையில், இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசியரியர் லலிதசிறி குணருவன் கருத்து வெளியிடுகையில் -

எமக்கு இன்னும் எந்த விவரங்களும் தரப்படவில்லை. ஒரு குழுவை நியமிக்க அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது.

இதற்கான விதிமுறைகளை அரசு வழங்கும். இப்போதைக்கு, குழுவின் நோக்கம் எங்களுக்குத் தெரியாது - என்றார். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



## கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ணம்:

# முதல்முறையாக சம்பியன் வென்றது லிவர்பூல் அணி!

உதைபந்து கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில், இங்கிலாந்தின் முன்னணி கழக அணியான லிவர்பூல் அணி முதல்முறையாகச் சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

கட்டார் – டோஹா கலீபா சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற 16ஆவது உதைபந்து கழகங்களுக்கிடையிலானஉலகக்கிண்ண உதைபந்துத் தொடரின் மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், லிவர்பூல் அணியும், பிரேஸிலின் பிளமெங்கோ அணியும் முட்டி மோதிக் கொண்டன.




இரசிகர்களின் உச்சக்கட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், இரண்டு அணிகளும் கோல்போடக்கடுமையாகப்போராடின.

எனினும் முற்பாதியில் இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. இதே நிலைமை இரண்டாவது பாதியிலும் நீண்டது.

போட்டி முடிவதற்கு முன் லிவர்பூல் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. ஆனால், பெனால்டி மறுக்கப்பட்டது.

இதனால் 90 நிமிட போட்டி கோல்கள் ஏதுமின்றி முடிவடைந்தது. இதனால் கூடுதல் நேரமாக 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன.

இதில் 99ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் நட்சத்திர வீரர் ரொபேர்ட்டோ பேர்மினோ, வெற்றி கோல் அடிக்க லிவர்பூல் 1–0 என வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்த வெற்றியின் மூலம், இங்கிலாந்து கழகமொன்று உலக கிண்ணத்தை வெல்வது 2008ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்னதாக 2008ஆம் ஆண்டு மன்செஸ்டர் யுனைடெட் அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஜுர்கன் க்ளோப் தலைமையில் சிறப்பாக விளையாடிவரும் லிவர்பூல் உதைபந்து கழக அணி, நடப்பு வருடத்தில் வென்ற மூன்றாவது சம்பியன் கிண்ணம் இதுவாகும்.

இதற்கு முன்னதாக யூரோ சம்பியன்ஸ் லீக், யூரோ சுப்பர் கிண்ணம் ஆகிய சம்பியன் கிண்ணங்களுக்கு லிவர்பூல் அணி முத்தமிட்டுள்ளது.



# அருண்குமாரின் அதிரடியால் ஜொலிஸ்ரார்ஸ்அணி வெற்றி

சிறீலங்கா கிரிக்கட் சங்கத்தினால் நடத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான பிரிவு 3 இன், இரண்டாம் சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து மன்னார் ஸ்ரார் ஈகில்ஸ் அணி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதியது. இந்தப் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 103 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மன்னார் ஸ்ரார் ஈகில்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய துடுப்பாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 35.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அருண்குமார் ஆட்டமிழக்கமால் 83 ஓட்டங்களையும் கிருஷோபன் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரார் ஈகில்ஸ் சார்பில் மயூரேஸ் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் ஸ்ரார் ஈகில்ஸ் அணி 29.2 ஓவர்களில் 88 ஓட்டங்களுக்கு சகலஇலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களால் ஜொலிஸ்ரார்ஸ் அணியிடம் தோல்வியுற்றது. துடுப்பாட்டத்தில் விஜயரத்னம் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோபிராம் 5 இலக்குகளையும் வாமனன் 4 இலக்குகளையும் மற்றும் யுமேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஜொலிஸ்ரார்ஸ் அணி அடுத்த போட்டியில் கிளிநொச்சி அணியினை எதிர்த்து நாளை புதன்கிழமை கொக்குவில் இந்து மைதானத்தில் ஆடவுள்ளது.

# தொடரை வென்றது பாக். ரசிகர்கள் கொண்டாட்டம்!




இலங்கை அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி 263 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, சமநிலையில் நிறைவடைய இப்போட்டியில் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணி தொடரை 1 – 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

அத்தோடு, ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான 60 புள்ளிகளையும் பாகிஸ்தான் அணி பெற்றுக்கொண்டது.

பல்வேறு நெருக்கடி மற்றும் சவால்களுக்கு மத்தியில், 10 வருடங்களுக்கு பிறகு சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை நடத்திய பாகிஸ்தான் அணி, இந்த வெற்றியின் ஊடாக திருப்தி கொண்டுள்ளது.

கராச்சி மைதானத்தில் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 191 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதில் பாகிஸ்தான் அணி சார்பில், ஷான் மசூத் 3 ஓட்டங்களையும், அபிட் அலி 38 ஓட்டங்களையும், பாபர் அசாம் 60 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.அசார் அலி ஓட்டமெதுவும் பெறவில்லை.

அசாட் சபீக் 63 ஓட்டங்களையும், ஹரிஸ் சொஹைல் 9 ஓட்டங்களையும், மொஹமட் ரிஸ்வான் 4 ஓட்டங்களையும், யாசிர் ஷா மற்றும் மொஹமட் அப்பாஸ் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

ஷாயின் அப்ரிடி 5 ஓட்டங்களையும், நயீம் ஷா ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் லஹிரு குமார மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் விஷ்வ பெனார்டோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 271 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் 74 ஓட்டங்களையும், தில்ருவான் பெரேரா 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஷாயீன் அப்ரிடி 5 விக்கெட்டுகளையும், மொஹமட் அப்பாஸ் 4 விக்கெட்டுகளையும், ஹரிஸ் சொஹைல் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 80 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 555 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் இலங்கை அணிக்கு, பாகிஸ்தான் அணி, 476 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதன்போது பாகிஸ்தான் அணி சார்பில், ஷான் மசூத் 135 ஓட்டங்களையும், அபிட் அலி 174 ஓட்டங்களையும், அசார் அலி 118 ஓட்டங்களையும், பாபர் அசாம் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும், மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும், லசித் எம்புல்தெனிய ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 212 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 263 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது இலங்கை அணியில் அதிகபட்ச ஓட்டங்களாக, ஒசேத பெனார்டோ 102 ஓட்டங்களையும், நிரோஷன் டிக்வெல்ல 65 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், நாஷீம் ஷா 5 விக்கெட்டுகளையும், யாசிர் ா 2 விக்கெட்டுகளையும், ஷாயீன் அப்ரிடி, மொஹமட் அப்பாஸ் மற்றும் ஹரிஸ் சொஹைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் பாகிஸ்தானின் அபீட் அலி தெரிவு செய்யப்பட்டார்.

# ரோகித் சர்மாவுக்கு ஓய்வு?




இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் இருந்து ஓய்வு அளிக்கும்படி இந்திய கிரிக்கெட் சபையிடம் ரோகித் சர்மா கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக திகழ்பவர் ரோகித் சர்மா. அவர் இந்த ஆண்டு 3 வடிவிலான கிரிக்கெட்டிலும் அசத்தி ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதற்கிடையே அவர் இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் இருந்து ஓய்வு அளிக்கும்படி இந்திய கிரிக்கெட் சபையிடம் கேட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தியா – இலங்கை அணியுடன் மூன்று இரவு 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது. முதல் போட்டி 5ஆம் திகதி கௌகாத்தியில் நடக்கிறது.

இந்த நிலையில்தான் ரோகித்சர்மா தனக்கு இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்து ஓய்வு அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். இந்த ஆண்டு ரோகித் சர்மா அனைத்து வகைப் போட்டிகளிலும் தொடர்ந்து விளையாடினார்.

# பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கை உடன் விலகவேண்டும்!

## ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 24

புலம்பெயர் தமிழர்களுக்கு கூஜா தூக்கும் பொது நலவாய அமைப்பிலிருந்து இலங்கை உடனடியாக விலகவேண்டும் என எம்பிலிப்பிட்டிய ஓமல்பே சோபித தேரர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இங்கிலாந்து பிரதமராக மீண்டும் வெற்றி பெற்ற பொறிஸ் ஜோன்சன் தனது தேர்தல் வெற்றியின் பின் புலிகளின் அபிலாஷைகளைத் தூண்டும் விதத்தில் உரையாற்றியுள்ளார். இதன் மூலம் அவர் புலிகளுடன் உள்ள தொடர்பு வெளிப்படையாகத் தெரிகின்றது.

பொதுநலவாய அமைப்பு இன்று வலுவிழந்த நிலைமையில் இருக்கிறது. அதனால் இதற்கு உயிர் கொடுக்கவே இவர் முயல்கிறார். இலங்கையை இவர் இன்னும் தனது கொலனித்துவ அடிமை நாடாக நினைக்கிறார் போலும். அவ்வாறு அவர் நினைப்பதாக இருந்தால் அது பெரும் தவறு. கொலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற எம்மை அவர்



தொடர்ந் தும் அடிமைகளாக வைத்திருப்பதற்கு முயற்சி செய்கிறார் எனவும் தெரிகிறது.

எனவே எமக்குப் பொதுநலவாய அமைப்பின் தொடர்புகள் இனித் தேவையில்லை. அதிலிருந்து விலகுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# கோட்டா அரசு சர்வதேசத்துக்கு அடிபணியாது!

## உறுதியாகக் கூறுகின்றார் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, டிசெ. 24

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் அடிபணியப் போவதில்லை என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கடந்த கால அரசு சர்வதேச நாடுகளுக்கு அடிப்பணிந்து செயற்பட்டதுடன், சர்வதேச சக்திகளிடம் மண்டியிட்டும் கிடந்தது.

நாம் வெற்றி பெற்றமை மாத்திரமல்ல, இந்தத் தேர்தல் வெற்றியானது முழு நாட்டையும் வெற்றிகொள்ள வைத்துள்ளது. அதல பாதாளத்துக்குச் செல்லவிருந்த நாட்டைக் காப்பாற்றியுள்ளமை மாத்திரமல்ல, பாதுகாப்பற்றிருந்த நாட்டை பாதுகாப்பானதாக மாற்றியுள்ளோம். அத்துடன் பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் நாடாகவும் மாற்றியுள்ளோம்.

இந்த அனைத்தையும் மக்கள்தான் ஏற்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜ



பக்ஷ தோல்வியடைந்திருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும்?.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசுக்கு சர்வதேச ரீதியில் சிறந்த ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. என்றாலும், நாம் சர்வதேசத்துக்கு அடிபணிந்து செயற்படமாட்டோம். சர்வதேச சக்திகளுக்கும் பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் கோட்டாபயவின் அரசாங்கம் ஒருபோதும் அடி பணியாது – என்றார். (ஐ)

# இளைஞர் மீது தாக்குதல்: ஓட்டோவும் சேதமாகியது



வவுனியா, டிசெ. 24

வவுனியா பன்றிக்கெய்த குளத்தில் இளைஞரொருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமையுடன், அவர் பயணித்த ஓட்டோவும் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

நயினாமடுவில் வசிக்கும் மனோகரன் டிலக்சன் என்ற 24 வயதுடைய இளைஞரே இந்தத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

பன்றிக்கெய்த குளத்தில் உள்ள தனது காணியில் ஓட்டோவை நிறுத்திவிட்டு உணவு உண்பதற்காகக் கடைக்குச் சென்ற சமயத்திலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் காணிக்குள் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவும் சேதமாக்கப்பட்டதாக அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ள இளைஞர், தனது காணிக்கான எல்லைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சிங்கள நபரொருவர் மீது சந்தேகம் உள்ளதாகவும் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வர்த்தக நிலையத்தில் தீ!

வவுனியா – குருமன்காட்டில் அமைந்துள்ள சி.சி.ரீ.வி. விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு தீவிபத்து ஏற்பட்டுள்ளது. விடுமுறை நாளான நேற்று முன்தினம் வர்த்தக நிலையம் மூடப்பட்டிருந்த நிலையில் இரவு 8 மணியளவில் கடையில் இருந்து புகை வெளிக்கிளம்பியுள்ளது.

இதனை அவதானித்த சிலர் அந்த வியாபார நிலையத்தின் உரிமையாளருக்குத்தெரியப்படுத்தியமையுடன்,தீயணைப்பு பிரவினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு



வந்துள்ளனர். விபத்தில் வியாபார நிலையத்தில் இருந்த பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் தெரியாத நிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# வைரவபுளியங்குளத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ. 24

வவுனியா வைரவபுளியங்குளம் குளக்கட்டு வீதி பகுதியில் வசித்த 75 வயதுடைய பெண்ணொருவர், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த வயோதிபப் பெண், தனது சகோதரனின் வீட்டில் வசித்து வந்துள்ளார். சகோதரன் நேற்று முன்தினம் வயலுக்குச் சென்ற நிலையில், நேற்றுக் காலை உணவைத் தனது சகோதரிக்கு வழங்குமாறு அயல் வீட்டில் உள்ளவர்களிடம் அலைபேசி ஊடாக கேட்டுள்ளார்.

அவருக்குக் காலை உணவு வழங்குவதற்காக இளைஞன் ஒருவர் அங்கு சென்ற நிலையில், அந்தப் பெண்ணின் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸாருடன் இணைந்து தடவியல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# மெக்சிக்கோ கடத்தல்காரர்களிடம் சிக்கிய இரு இலங்கையர்கள் மீட்பு







மெக்சிக்கோவில் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கையர்கள் உள்ளிட்ட எட்டுப் பேர், அந்த நாட்டு எல்லையோரக் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

கடத்தித் தடுத்து வைத்திருந்த இரண்டு இலங்கையர், ஆறு நேபாளிகளை அச்சுறுத்தி, கடத்தல்காரர்கள் தொடர்ச்சியாகக் கப்பம் பெற்று வந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கடத்தி வைக்கப்பட்டிருந்த எட்டுப் பேரும் மெக்சிக்கோவின் தென்பகுதி நகரான அன்ரிகுவோ மொரெலோஸ் என்ற நகரில் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்கள் எல்லையோரக் கிராமப் புறம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்து, விரைந்து சென்ற மெக்சிக்கோ எல்லைக் காவல்துறையினர் அவர்களை மீட்டுள்ளனர்.

காவல்துறையினர் அங்கு சென்றபோது, வீடு ஒன்றில் இருந்து எட்டு ஆண்கள் உதவி கோரியபடி வெளியே ஓடினர்.

கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்ற தகவலை மெக்சிக்கோ காவல்துறை வெளியிடவில்லை.

கடத்தல்காரர்கள் தம்மை மூன்று நாள்களாக அந்த வீட்டில் உணவு, குடிதண்ணீர் எதுவும் வழங்காமல் அடைத்து வைத்து, உறவினர்களிடம் பணம் கோரி வந்தனர் என்று மீட்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க எல்லையைக் கடக்க முயன்றபோதே தாம் கடத்தல்காரர்களிடம் சிக்கினர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அவர்களுக்கு உடனடியாக உணவு, குடிதண் ணீரை வழங்கிய காவல்துறையினர், கியூடாட் மான்ரில் உள்ள ரமலிப்பாஸ் சட்டமா அதிபர் செயலகத்துக்குக் கொண்டு சென்றனர்.

மருத்துவச் சோதனைகளுக்குப் பின்னர், அதிகாரிகள் இந்த வழக்கை ஆவணப்படுத்தியுள்ளனர்.

சட்டவாளர்களுடனான நேர்காணல்களுக்குப் பிறகு, இவர்கள் மெக்சிக்கோவில் இருப்பதற்கான சட்டபூர்வமான நிலையை ஆராய்வதற்காக மெக்சிக்கோவின் தேசிய குடிவரவு நிறுவனம் அவர்களை அழைத்துச் சென்றுள்ளது. (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம், இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு உடனடியாகவே நிவாரணம்!

## ஜனாதிபதி கோட்டா உத்தரவு



கொழும்பு, டிசெ. 24

இலங்கையில் நீடிக்கும் சீரற்றக் காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக உரிய நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் தொடர்பில் கண்டறிவதற்காக ஜனாதிபதி கோட்டாபய நேற்று அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டத்தின் சில பிரதேசங்களுக்குக் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நலன்பேணல் நடவடிக்கைகளைத் துரிதமாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த நிவாரண நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. அனர்த்தத்தின் போது வழங்கப்பட வேண்டிய நிவாரணங்கள் மற்றும் அனர்த்தத்தின் பின்னர் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

இந்த இரண்டு செயற்பாடுகள் தொடர்பாகவும் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்படுகின்றது என ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அனுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலர் பிரிவுகளில் 10 பிரிவுகள் அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ள அதேவேளை, டிசெம்பர் 20ஆம் திகதி முதல் நேற்று வரை 1,561 குடும்பங்களைச் சேர்ந்த 5,181பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 937 குடும்பங்களைச் சேர்ந்த 2,923 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமையுடன், அவர்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவு பொருள்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்கள் சிலவற்றிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று விஜயம் செய்து மக்களைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 100,000 இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு!

கொழும்பு, டிசெ. 24

வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம்இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் பல்நோக்கு மேம்பாட்டுப் பணிக்குழு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்கீழ் கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்தத் தவறிய 15 தொடக்கம் 30 வயதிற்கும் இடைப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவைப் பெறும் இளைஞர், யுவதிகள் தொழிலில் அமர்த்தப்படவுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இவர்கள் 30 ஆயிரம் ரூபா முதல் 35 ஆயிரம் ரூபாவுக்கு இடைப்பட்ட சம்பளத்துடன் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றமையுடன், நிரந்தர சேவையில் அமர்த்தப்படுவார்கள். இவர்கள் ஓய்வூதியக் கொடுப்பனவைக் கொண்டிருக்கமாட்டார்கள், ஆயினும் ஊழியர் சேமலாபநிதி உள்ளிட்ட தொழில் ரீதியிலான உரிமைகளைக் கொண்டிருப்பார்கள் என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

இவர்களுக்குத் தனியார் மற்றும் அரச துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும். இந்தப் பயிற்சிகளின் பின்னர் டெங்கு ஒழிப்புப் பிரிவு மற்றும் சிவில் பாதுகாப்புப் படை போன்ற துறைகளில் இவர்கள் தொழிலில் அமர்த்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# தொடர்பாடல் அலுவலகங்கள் திறக்கின்றார் அங்கஜன் எம்.பி.



யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் தொடர்பாடல் அலுவலகங்கள் இரண்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

அலுவலகங்களை யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பழைய சோனகத்தெரு 13ஆம் வட்டாரம், ஜே - 86 ,ஜே - 87 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக, வட்டாரப் பிரதிநிதி அப்துல் கரீம் ஹஸ்ஸான் தலைமையிலும் -

அத்தோடு புதிய சோனகத்தெரு 10 ஆம் வட்டாரம் ஜே - 88 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டார பிரதிநிதி பழனிமுத்து ஆறுமுகம் தலைமையிலும் - இந்த அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் வட்டார ரீதியாக அலுவலகங்களை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த அலுவலங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது வட்டாரப் பிரதிநிதிகளுக்கான அங்கத்துவ அட்டைகளும், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் வழங்கப்பட்டன. (ஐ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# ஹக்கீம், ரிஷாத்திடம் வாக்குமூலம் பெற சட்டமா அதிபர் அறிவுறுத்தல்

கொழும்பு, டிசெ. 24

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியூதீன் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுவதற்கான அறிவித்தல் சட்ட மா அதிபரால் குற்ற விசாரணைப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரி, நேற்றுக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு விசாரணைக்கு வந்தது.

இதன்போதே இந்தத் தகவலை குற்ற விசாரணைப் பிரிவு மன்றுக்கு அறிவித்தது. (ஐ)

# முசலி பட்ஜெட் நிறைவேற்றம்

மன்னார், டிசெ. 24

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நிர்வாகத்தின் கீழான முசலிப் பிரதேசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தை நேற்று முசலிப் பிரதேசபையின் தவிசாளர் ஹலீபத்து சுபியான் சமர்பித்தார்.

இதன்போது அந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 11 உறுப்பினர்கள் வாக்களித்தமையுடன், 5 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை சேர்ந்த ஓர் உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் 2 உறுப்பினர்களும் என ஐவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

மேலும் எதிர்க்கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் இருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவரும், வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். (ஐ)

# மீனவரின் காலைக் கடித்த முதலை!

மட்டக்களப்பு, டிசெ. 24

வாழைச்சேனை - ஓட்டமாவடி பாலத்திற்கு அருகிலுள்ள ஆற்றில் நேற்று முன்தினம் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர் முதலை கடித்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடிபாலத்துக்கு அருகிலுள்ள ஆற்றில் நேற்று முன்தினம் மீன் பிடித்துக் கொண்டிருந்த இருவரில் ஒருவரை முதலை கடித்து இழுத்துச் சென்றபோது அதைக் கண்டுகொண்ட மற்றையவர் பாதிக்கப்பட்டவரை மிகப் போராட்டத்துக்கு மத்தியில் முதலையிடமிருந்து இழுத்து காப்பாற்றியுள்ளார்.

ஓட்டமாவடியைச்சேர்ந்த இந்த நபரின் கால் பகுதியில் முதலை பலமாகக் கடித்துள்ளது. பலத்தகாயமடைந்த நபர் தற்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனடையுங்கள் பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka. Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24 .12.2019 இல் வெளியிடப்பெற்றது.